பொது சுற்றறிக்கை கடித இல: 02-134/2014

எனது இல: TCS/B/48/2014
சுகாதார அமைச்சு,
"சுவசிறிபாய"
385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,
கொழும்பு – 10.
19/09 /2014

அனைத்து மாகாண செயலாளர்கள்,
மாகாண /பிரதிமாகாண / பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்,
பன்முகப்படுத்தப்பட்ட சுகாதார சேவைகள் பிரிவுகளின் தலைவர்கள்,
போதனா வைத்தியசாலைகள், மாகாண பொது வைத்தியசாலைகள் மற்றும்
விஷேட இயக்கங்களின் பணிப்பாளர்கள்,
வைத்திய அதிகாரிகள் மற்றும் மாவட்ட வைத்திய அதிகாரகள் அனைவருக்கும்,

**சுகாதார சேவைகள் திணைக்களத்தின் விஷேட வைத்திய நிபுணர் பதவிக்கான விண்ணப்பங்கள்.**
**[ இறுதி சேவை நிலையம் (End Posts)]**

சுகாதாரத் திணைக்களத்தில் பின்வரும் பதவிகளின் பொருட்டு உரிய தகைமைகளையுடைய விஷேட வைத்திய நிபுணர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விஷேட வைத்திய நிபுணர்களாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டவர்களிடமிருந்து மாத்திரமே விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பட்டப்படிப்பின் பின்னரான மருத்துவ நிறுவனத்தினால் வழங்கப்படும் குறித்த தவணைக்காக சபை அங்கீகாரத்தை எதிர்பார்திருப்பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
குறித்த விபரங்களுடன் சுகாதார அமைச்சில் காணப்படும் வெற்றிடங்கள் தொடர்பான பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

| Station | Posts | No of Posts | Points will be Calculated up to |
|---|---|---|---|
| **Teaching Hospital - Batticaloa** | Consultant General Physician | 01 பதவி | Closing Date |

நியமனங்கள் 2001 மார்ச் 22 ஆம் திகதிய 1176/15 அம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் உள்ள சுகாதார சேவைகள் பிரமாணக் குறிப்பின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

நிறுவனத் தலைவர்கள். அவர்களின் நிலையங்களில் பணியாற்றும் சகல விஷேட வைத்திய நிபுணத்துவ தர மருத்துவ அலுவலர்களின் கவனத்திற்கு இச்சுற்றறிக்கையின் விபரத்தை தெரியப்படுத்தும்படி வேண்டப்படுகின்றனர். தகைமையுடைய அனைத்து விண்ணப்பதாரிகளும் இதில் உள்ள மாதிரி படிவத்திற்கமைய தமது விண்ணப்பங்களைத் தயாரித்து 2014/10/29 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு இந்த அலுவலகத்தை அடையும் வகையில் தமது நிறுவனத் தலைவர்கள் மற்றும் பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்களினூடாக சமர்ப்பிக்கும் படி வேண்டப்படுகின்றனர்.முடிவுத் திகதியின் பின்னர் பெறப்படும் விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும்.

பணிப்பாளர் (TCS)
சுகாதார அமைச்சு
"சுவசிறிபாய"
385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை,

கொழும்பு – 10.

விண்ணப்பங்களை மீளப் பெற (withdraw) விரும்புபவர்கள் விண்ணப்ப முடிவு திகதியின் இரண்டு(2) வாரங்களுக்குள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும். அதன் பின்னர் விண்ணப்பங்கள் வாபஸ் பெற அனுமதிக்கப்படமாட்டாது. இப் பதவிக்காக விண்ணப்பதாரி தெரிவுசெய்யப்பட்டால் அவன் / குறித்த பதவியை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பட்டப்படிப்பின் பின் பட்டப்படிப்பு மாணவர்களுக்குக் கற்பித்தல் சுகாதாரத் திணைக்களத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் அனைத்து வைத்திய நிபுணர்களின் கடமைகளில் முக்கியமான ஒரு பகுதியாகும். தெரிவுசெய்யப்பட்டவர்கள் இப்பணியை நிறைவேற்றுவதற்கு விருப்பமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

அனைத்து நிறுவனத் தலைவர்களும் மற்றும் விஷேட நிபுணத்துவ வைத்திய அலுவலர்களும் ஏதேனும் மேலதிக விபரங்களுக்கு டாக்டர்.பி.எல்.அத்தப்பத்து பணிப்பாளர் ((TCS) அவருடன் தொடர்புகொள்ளுமாறு வெண்டப்படுகின்றனர்.(அலுவலக (தொ.பே.இல.011-2699145)

செயலாளர்
சுகாதார அமைச்சு
பிரதிகள்:

1. செயலாளர் - GMOA
2. பணிப்பாளர் - PGIM